# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், சங்கரன்கோவில் நகரத்தைச் சேர்ந்த ரா.ராஜதுரை அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28-03-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தமது பிறந்த நாளையொட்டி துணைவியாருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - கோவை<br>பொள்ளாச்சி |
| 01.04.2024 (திங்கட் கிழமை) | - திருநெல்வேலி<br>தென்காசி |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - கன்னியாகுமரி |
| 04.04.2024 (வியாழக் கிழமை) | - மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | - சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
'சென்னை-18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

# தருவைக்குளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்!

## தூத்துக்குடி பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி உறுதி!

**தூத்துக்குடி, மார்ச் 29 - 'இந்தியா' கூட்டணியில் தூத்துக்குடி மக்களவை தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (27.03.2024) மாலை தருவைக்குளத்தில் தனது பிரச்சாரத்தைத் தொடங்கினார். தருவைக்குளத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும் என தி.மு.க. வேட்பாளர் கனிமொழி கருணாநிதி உறுதி அளித்தார்.**

தொடர்ந்து, புதியம்புத்தூர், ஓட்டப்பிடாரம், ஓசானுத்து, வாஞ்சி மணியாச்சி, அக்கநாயக்கன்பட்டி, மருதன்வாழ்வு, ஆயிரவன்பட்டி ஆகிய பகுதிகளில் கூடி நின்ற மக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு அளிக்க பிரச்சாரம் செய்தார்.

பிரச்சாரத்தின்போது கனிமொழி கருணாநிதி பேசியதாவது :-

கடந்த தேர்தலில் வேட்பாளராக நான் களம் கண்ட போது, எதிர்க்கட்சிகள் இவர் சென்னையில் இருந்து வருகிறார். வெற்றி பெற்றால் மீண்டும் தூத்துக்குடி வரமாட்டார் எனக் கூறினர். வெற்றி பெற்ற பின்னர் இங்கு பலமுறை வந்துள்ளேன்.

தருவைகுளத்தில் இருந்து வேளாங்கண்ணி செல்ல பேருந்து வசதி, கனரா வங்கி கிளை வேண்டும் என மக்கள் கேட்டனர். இவை செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.10 லட்சத்தில் உயர் கோபுர விளக்கு அமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளன. இங்கு புதிய மீன்பிடி துறைமுகம் வேண்டுமென மீனவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு ரூ.2 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீன்பிடி தடைக்காலத்தில் ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.8 ஆயிரமாக உயர்த்தி தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். முதலமைச்சர் உயர்த்தி தருவதாகக் கூறியுள்ளார். விரைவில் அந்த நிதி உங்கள் கைகளில் வந்து சேரும். அதனால் தேர்தலில் வெற்றி பெற்று நான் எங்கும் போய்விடவில்லை. உங்களை தேடித்தான் வந்து கொண்டு இருக்கின்றேன்.

### மிகப்பெரிய கார் தொழிற்சாலை!

இங்கு மிகப்பெரிய வியட்நாம் கார் தொழிற்சாலை இன்னும் 15 மாதங்களில் தொடங்கப்பட உள்ளது. அதற்குரிய பணியாளர்களைத் தேர்வு செய்ய உள்ளனர். இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள், இளம்பெண்களுக்கு அவர்களே பயிற்சி அளித்து பணிக்கு அமர்த்த உள்ளனர். டைடல் பார்க் விரைவில் திறக்கப்பட உள்ளது. இந்த ஆட்சி ஆண், பெண், சாதி, மதம் என எந்த வேறுபாட்டையும் பார்க்காத ஆட்சி. ஆனால், மதத்தை மட்டும் வைத்து அரசியல் செய்து கொண்டுள்ள மோடி, எந்த வாக்குறுதி கொடுத்தாலும் நிறைவேற்ற மாட்டார். மழை வெள்ளத்துக்கு எந்த நிவாரணமும் கொடுக்கவில்லை. ஆனால், நிவாரணம் கொடுத்தது தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தான்.

### சிலிண்டர் விலை குறைப்பு!

சமையல் எரிவாயு சிலிண்டருக்கு மானியம் கொடுத்து, விலையை குறைப்போம், என்று பா.ஜ.க.வினர் கூறினர். மோடி ஆட்சிக்கு வந்த போது, ஒரு எரிவாயு சிலிண்டர் விலை ரூ.410. தற்போது ஆயிரம் ரூபாய்க்கு மேல். ஆனால், மகளிர் தினத்துக்குப் பெண்கள் சமையல் அறையிலேயே இருக்கப் பிறந்த மாதிரி ரூ.100 குறைத்துள்ளார். இதுதான் அவருக்குத் தெரிந்த மகளிர் தினம். சிலிண்டர் விலையைக் குறைத்துள்ளேன் எனத் தேர்தலுக்கு முன் மகளிர்களை ஏமாற்றுகிறார்.

இதற்காக தி.மு.க. தேர்தல் அறிக்கையில் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.500 என குறைக்கப்படும். பெட்ரோல் ரூ.75, டீசல் ரூ.65 என குறைக்கப்படும். அதே போல், சுங்கச்சாவடிகள் தமிழ்நாட்டில் முற்றிலும் ஒழிக்கப்படும் என கூறியுள்ளோம். தி.மு.க. சொல்வதை தான் செய்யும்.

இந்தியா கூட்டணி ஆட்சி ஒன்றியத்தில் வர வேண்டும். தமிழ்நாட்டுக்கு நன்மை செய்யக் கூடிய ஆட்சி அங்கே வர வேண்டும். தி.மு.க. சார்பில் முதலமைச்சர் என்னை மீண்டும் வேட்பாளராக நிற்கும் வாய்ப்பு அளித்துள்ளார். மீண்டும் உங்களுடன் பணியாற்றும் வாய்ப்பை நீங்கள் எனக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

பிரச்சாரத்தின்போது, தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, திருவை குண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் கே.பி.ஆறுமுகம் மற்றும் கூட்டணி கட்சியினர் உட்பட திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

### தென்காசி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி மார்க்சிஸ்ட் வேட்பாளர்

# ராணி ஸ்ரீ குமாரை ஆதரித்து - சங்கரன் கோவிலில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் சிறப்புரை!

தென்காசி, மார்ச் 29 - தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு இந்தியா கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தென்காசி மக்களவைத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமாரை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டம் சி.பி.எம்.வட்டார செயலாளர் அசோக்ராஜ் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வாசுதேவநல்லூர் தொகுதி சதன்திருமலைக்குமார் எம்.எல்.ஏ. சி.பி.எம்.மாவட்டச் செயலாளர் உ.முத்துப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் பங்கேற்று கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமாரை ஆதரித்து பேசியதாவது.

இந்தியா கூட்டணி என்ற வலுவான இந்த கூட்டணி கடந்த 7 ஆண்டுகளாக தொடர்ந்து பயணித்து வருகிறது. சிலர் திடீரென்று வேட்பாளர் ஆகிறார்கள். கூட்டணி அமைக்கிறார்கள். ஆனால் இந்தியா கூட்டணி இந்தத் தேர்தலுக்காக அமைத்த கூட்டணி கிடையாது. 2019 தேர்தல், 2021 தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் என தொடர்ந்து இந்த கூட்டணி இருக்கிறது. இந்தியா கூட்டணி தமிழகத்தில் ஒரு மகத்தான கூட்டணியாக, இமயமலை கூட்டணியாக ஒரு கம்பீரமான கூட்டணியாக இந்தத் தேர்தலைச் சந்திக்கிறது.

தென்காசி மக்களவைத் தொகுதியில் போட்டியிடுகிற தி.மு.க.வேட்பாளர் ராணி ஸ்ரீ குமார் உறுதியாக வெற்றி பெறுவார் என்பது எல்லாருக்கும் தெரிந்தபோன ஒன்று. தமிழகத்தில் 40 தொகுதிகளுக்கும் சென்று மக்களின் மனநிலையை ஆய்வு செய்த ஒரு குழுவின் கணக்கெடுப்புப்படி, 17 தொகுதிகளில் தி.மு.க.வுக்கு எதிர்கூட்டணியில் இருக்கிற எல்லா வேட்பாளர்களும் டெபாசிட்டை இழக்கிறார்கள். குறிப்பாக முதலில் டெபாசிட்டை இழக்கக் கூடிய தொகுதி எதுஎன்றால் தென்காசி தொகுதிதான்.

ஆனால் யாருமே டெபாசிட் வாங்க முடியாது என்பதுதான் இன்றைய நிலை.

இந்தத் தொகுதியில் பெரிய தலைவர்கள் போட்டியிடலாம். அவர்களும் எனக்கு நண்பர்கள் தான். ஆனால் அவர்கள் மேற்கொண்டிருக்கிற சந்தர்ப்பவாத அரசியலில் அவர்கள் தங்களது அரசியல் முகவரியை இந்தத் தேர்தலோடு இழந்துவிடுவார்களோ என்பதுதான் உண்மையாக இருக்கிறது.

இந்தக் கூட்டணி 2019 தேர்தலிலேயே பெரிய அணியையே எதிர்த்து போட்டியிட்டு 39 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். 2024 தேர்தலில் அந்த பெரிய அணி சிதறு தேங்காய் போல உடைந்து கிடக்கிறது. அ.தி.மு.க பல அணியாக உடைந்து கிடக்கிறது. அதற்குள்ளேயே ஒரு கூட்டணி வைக்கும் அளவுக்கு அ.தி.மு.க. இருக்கிறது. அதனால் எதிரணியில் இருப்பவர்களுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசினார்.

நிகழ்வில் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட தொ.மு.ச. சார்பில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சிறப்புத் தலைவர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் அஸ்தம்பட்டி உழவர் சந்தை மற்றும் கன்னங்குறிச்சி சாலை பகுதியில் கழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு அறிக்கை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் வி.மணி, போக்குவரத்து தொ.மு.ச. தலைவர் ராஜாமணி, பொதுச் செயலாளர் மனோகரன், பொருளாளர் முருகன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாகை சந்திரசேகர் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01.04.2024 | - | கன்னியாகுமரி |
| 02.04.2024 | - | திருநெல்வேலி |
| 03.04.2024 | - | தூத்துக்குடி |
| 04.04.2024 | - | தென்காசி |
| 05.04.2024 | - | விருதுநகர் |
| 06.04.2024 | - | தேனி |
| 07.04.2024 | - | மதுரை |
| 08.04.2024 | - | இராமநாதபுரம் |
| 09.04.2024 | - | இராமநாதபுரம் |
| 10.04.2024 | - | சிவகங்கை |
| 11.04.2024 | - | தஞ்சாவூர் |
| 12.04.2024 | - | பெரம்பலூர் |
| 13.04.2024 | - | சேலம் |
| 14.04.2024 | - | நாமக்கல் |
| 15.04.2024 | - | ஈரோடு |
| 16.04.2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.03.2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வழக்கறிஞர் அருள்மொழி தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் -19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, வழக்கறிஞர் திருமதி அருள்மொழி அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 30-03-2024 - | திருபெரும்புதூர் |
| 31-03-2024 - | மத்திய சென்னை |
| 02-04-2024 - | காஞ்சிபுரம் |
| 03-04-2024 - | தென்சென்னை |
| 04-04-2024 - | வடசென்னை |
| 06-04-2024 - | நீலகிரி |
| 07-04-2024 - | ஈரோடு |
| 12-04-2024 - | திருவண்ணாமலை |
| 13-04-2024 - | கள்ளக்குறிச்சி |
| 14-04-2024 - | சேலம் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக்கழகச்செயலாளர்கள்தங்களுக்குள்கலந்துபேசி, ஒன்றிணைந்து,பிரச்சாரம்தொகுதிவாக்காளர்களைசென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.3.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## து. ராமதாஸ்

**மார்ச் 29 (2021)**



**தனது இளமை பருவத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**சென்னை மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் பகுதியில் வட்டச் செயலாளராகவும் – மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்..**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**